செ வெ எண்–442 **3.8.2009**

# பத்திரிக்கைச் செய்தி

**ஒருங்கிணைந்த மருந்தாளுநர் பட்டயப்படிப்பு மற்றும் நர்சிங் தெரபி** என்ற இரண்டரை ஆண்டு பட்டயப்படிப்புகள் வருகிற 2009–2010 கல்வியாண்டு முதல் இந்திய மருத்துவம் மற்றும் ஒமியோபதித் துறையினரால் நடத்தப்படவுள்ளது. மேற்கண்ட பட்டயப்படிப்புகளுக்கான கல்வித் தகுதி (+2) மேல்நிலைப் பள்ளி இறுதித் தேர்வில் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியியல் பாடங்களில் முதல் நேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் மேற்கண்ட தேர்வில் 35% மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். ஏனையோர் 40% மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

**ஒருங்கிணைந்த மருந்தாளுநர் பட்டயப்படிப்பில்** உடல் தத்துவம், பேச்சுத் திறமை, கணிணி பயன்பாடு, சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஓமியோபதி மருந்துகள் தயாரிக்கும் முறைகள் போன்ற பாடங்கள் கற்பிக்கப்படும். இந்தப் பட்டயப்படிப்பை படித்து முடித்தவர்களுக்கு சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஓமியோபதி மருந்துகள் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளில் வேலை கிடைக்க வாய்ப்புகள் உள்ளன.

**நர்சிங் தெரபி என்ற பட்டயப்படிப்பில்** உடல் தத்துவம், பேச்சுத் திறமை, கணிணி பயன்பாடு, சித்தாவில் தொக்கணத்தில் உள்ள யுக்திமுறைகள், ஆயுர்வேதாவில் பஞ்சகர்மாவில் உள்ள யுக்திமுறைகள், யுனானியில் ரெஜிமன் தெரபியில் உள்ள யுக்தி முறைகள் மற்றும் யோகா மற்றும் இயற்கை முறையில் உள்ள தடவு முறைகள் பயிற்றுவிக்கப்படும். இப்பட்டயப்படிப்பை படித்து முடித்தவர்களுக்கு மருத்துவமனைகள் மற்றும் சுற்றுலாத் துறையில் வேலை கிடைக்க வாய்ப்புகள் உள்ளன.

இப்பட்டயப்படிப்புகள் அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை மற்றும் அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி பாளையங்கோட்டையிலும் நடத்தப்படவுள்ளன. விண்ணப்பங்களை நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ மேலே குறிப்பிடப்பட்டுள்ள கல்லூரிகளிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**முதன்மைச் செயலர் மற்றும் இயக்குநருக்காக,**
**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை.**

ISSUED BY DIPR CHENNAI -09